# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

**2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி அமைச்சர் அவர்களினால் 2016, ஒற்றோபர் மாதம் 04 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2016, செத்தெம்பர் மாதம் 13 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

[ **140 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 26.00** **தபாற் செலவு : ரூபா 20.00**

2-PL 010226-475 (2016/10)

## சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதியிலிருந்து வரிவீதத்தை பதினைந்து சதவீதத்திற்கு அதிகரிப்பதாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை மீதான சே பெ வரியின் தவிர்ப்பை அகற்றுவதாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2016, சவனரி 1 ஆந் தேதியிலிருந்து 2016, சனவரி 13 ஆந் தேதி வரையிலான காலப்பகுதிக்காக வழங்கல்கள் செய்யப்பட்டு அவற்றில் வரி விலைப்பட்டிகள் வெவ்வேறு வீதங்களிலும் வழங்கப்படாதனவாகவும் இருந்தவிடத்து அக்காலப்பகுதிக்கான வழங்கலின் பெறுமதிக்காக ஏற்பாடு செய்வதாகும், அத்துடன் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளின் வழங்குகையினது பெறுமதியைக் கணக்கிடுவதற்காக ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சைவர் வீதம் இருத்தற் சேவைகளை வழங்குவதிலிருந்து பயணிகளின் வான்பயண அனுமதிச்சீட்டுக் கட்டணத்தைத் தவிர்ப்பதாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, கருதப்பட்ட வரிக்கான பொறுப்பை அகற்றுவதாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சே பெ வரிப் பொறுப்புக்கான பதிவு மட்டத்தைக் காலாண்டுக்காக 3 மில்லியன் ரூபாவாக அல்லது ஆண்டொன்றுக்கு 12 மில்லியன் ரூபாவாகக் குறைப்பதாகும் ; அத்துடன் மொத்தவிற்பனை மற்றும் சில்லறை விற்பனை வியாபாரத்துக்கான பதிவு தொடர்பான விளைவாந்தன்மையினவான மாற்றங்களையும் செய்வதாகும்.

**வாசகம் 8** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, வரிப்பட்டியலுக்காகத் தேவைப்படுத்தப்பட்ட மேலதிகத் தகவலை சமர்ப்பிப்பதற்காக ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 9** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஒரு விபரத்திரட்டை முறையான விபரத்திரட்டாக் கொள்வதற்கு மேலதிகத் தகவலைச் சமர்ப்பிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதாகும்.

**வாசகம் 10** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, தைத்த ஆடை மற்றும் நெயவையின் வழங்குகையின் மீது வருமதியான வரித்தொகையை அதிகரிப்பதாகும் ; அத்துடன் பண்டங்களின் மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை வழங்குகைக்காகக் கருதப்பட்ட உள்ளீட்டு வரவுக்காக ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 11** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 3 மாதகாலப்பகுதிக்கு நிதிசார் சேவைகளின் பதிவுக்கான மட்டத்தை 3 மில்லியன் ரூபாவாகக் குறைப்பதாகும்.

**வாசகம் 12 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, விபரத்திரட்டைச் சமர்ப்பிப்பதற்கான காலப் பகுதியை பன்னிரெண்டு மாதங்களாகவும் அதற்கிணங்க விளைவாந்தன்மையினவான மாற்றங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதாகும்.

**வாசகம் 13 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவுக்கான திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.

**வாசகம் 14 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, "நிதிசார் சேவைகளின்" வரைவிலக்கணத்தை விசாலிப்பதாகும்.

**வாசகம் 15 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அரசிறை நிருவாக முகாமைத் தகவல் முறைமையுடனான (ஆர்ஏஎம்ஐஎஸ்) தொடரிணைப் பதிவுக்காகவும் தொடர்புபட்ட செயற்பாடுகளுக்காகவும் பொய்யா வணங்களைச் சமர்ப்பிப்போருக்கான தண்டனை ஏற்பாடுகளை நீடிப்பதாகும்.

**வாசகம் 16 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 2016, மே 2 ஆந் தேதியிலிருந்து நிலைபெயர்காலச் சீராக்குதல்களை அகற்றுவதாகும்.

**வாசகம் 17 :** இவ்வாசகம், 2016 ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளுக்கிணங்க குறித்தசில விலக்களிப்புகளை அகற்றுவதற்கென முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையின் II ஆம் பாகத்தைத் திருத்துகின்றது.

ச.வ. ஓ. 27/2016

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

**1.** இச்சட்டம், 2016 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அதன் குறித்தசில ஏற்பாடுகள் நடைமுறைக்கு வரவேண்டிய தேதிகள் அத்தகைய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டாலொழிய, இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 2ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (iii)ஆம் விடயத்தில் "பன்னிரெண்டு சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்); அத்துடன்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "பன்னிரண்டு வீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/28 ஆகும்);" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (v)ஆம் உட்பந்தியின் (iv)ஆம் விடயத்தில் "2015, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற காலப் பகுதிக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2015, சனவரி1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்றதும் 2016, மாச்சு 31ஆம் தேதியன்று அல்லது அதற்குமுன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான

2-PL 010192-450 (2016/09)

காலப்பகுதிக்கும் அத்துடன் 2016, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று தொடங்கி 2016, மே 1ஆம் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கும் 2016 யூலை 12 ஆம் தேதியன்று தொடங்கி இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு; அத்துடன்''; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(3) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (V)ஆம் உட்பந்தியின் (iv)ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

''(V) 2016, மே 2ஆம் தேதியன்று தொடங்குகின்றதும் 2016, யூன் 30ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும் 2016, யூலை 1ஆம் தேதியன்று தொடங்குகின்றதும் 2016, யூலை 11 ஆம் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கும் இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கும் பதினைந்து சதவீதப்படி (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்).''.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆம் பிரிவுஇத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், ''அத்தகைய பண்டங்களின் மொத்த அல்லது சில்லறை வழங்கல் மீது தவிர, பண்டங்களின் மொத்த அல்லது சில்லறை வழங்கல்மீது வரி அறவிடப்படுதலாகாது:'' என்னும் சொற்களுக்குப் பதிலாக ''2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு, 2016, யூலை 11 ஆந்தேதியிலிருந்து தொடங்குகின்ற, ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும்தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதிக்கு அத்தகைய பண்டங்களின் மொத்த அல்லது சில்லறை

வழங்கல்மீது தவிர, பண்டங்களின் மொத்த அல்லது சில்லறை வழங்கல் மீது வரி அறவிடப்படுதலாகாது; அத்துடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

(2) ஓராம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் -

(அ) அப்பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில், "இரு நூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்கு; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இரு நூற்றைம்பது மில்லியன் ரூபாவுக்கு;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியில், "2015 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2015, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஆனால் 2016, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்கு, 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்குகின்ற ஆனால் 2016, மே 2 ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு மற்றும் 2016, யூலை 11 ஆந்தேதியன்று தொடங்குகின்ற ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற காலப் பகுதிக்கு நூறு மில்லியன் ரூபாவுக்கு; அத்து டன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(3) (iii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(iv) இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற அத்தகைய ஏதேனும் மூன்று மாத காலப்பகுதிக்கு பன்னிரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவுக்கு,”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5ஆம் பிரிவு, அப்பிரிவின் (13)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(14) 2016, சனவரி 1ஆம்தேதியிலிருந்து 2016, சனவரி 13 ஆந்தேதிவரையிலான காலப்பகுதிக்கு வரி விலைப்பட்டி அல்லாத விலைப்பட்டி ஒன்றைப் பதிவு செய்யப்பட்ட ஆளொருவர் வழங்கியுள்ளவிடத்து, வழங்கலின் பெறுமதி பின்வருமாறிருத்தல் வேண்டும்:-

(i) பதினொரு சதவீதத்திலல்லாது வேறொரு வீதத்தில் வரி சேகரிக்கப்பட்டுள்ளவிடத்து,-

(அ) எவையேனும் பண்டங்களினது வழங்குகையின் விடயத்தில், பெறுமதியானது, மொத்த விலைப்பட்டியிடப்பட்ட பெறுமதியை 200/297 இனால் பெருக்குவதன் மூலம் பெறப்பட்ட தொகைக்குச் சமமானதெனக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) ஏதேனும் சேவையினது வழங்குகையின் விடயத்தில், பெறுமதியானது, மொத்த விலைப்பட்டியிடப்பட்ட பெறுமதியை 100/99 இனால் பெருக்குவதன்மூலம் பெறப்பட்ட தொகைக்குச் சமமானதெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ii) வரியெதுவும் சேகரிக்கப்பட்டிராதவிடத்து, பிரதிபயன் உட்படவும் பதினொரு சதவீதத்தின் படியான

வரி நீங்கலாகவும் வரிக்குச் சமமான பெறுமதியாக விருக்குமெனக் கருதப்படுதல் வேண்டும்.".

(15) சுகாதாரக் கவனிப்புச் சேவைகளின் வழங்குகையினது பெறுமதி, நோய்நாட்டச் சேவைப்பாட்சிப்புகள், ஊடுபிரிப்பு மற்றும் வெளிநோயாளர் பகுதியினால் வழங்கப்பட்ட சேவைகள் என்பனவற்றின் ஆகுசெலவைக் கழித்து ஆனால் மருத்துவ ஆலோசகச் சேவைகள் நீங்கலாக, அத்தகைய வழங்கலின் பெறுமதியாதல் வேண்டும்:

ஆயின், அமைச்சர், காலத்துக்குக்காலம், சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காகத் தவிர்க்கப்படக்கூடிய வழங்குகையின் ஏதேனும் பெறுமதியை விதித்துரைக்கலாம். அமைச்சரினால் ஆக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் ஒழுங்குவிதி அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும். அத்தகைய ஒழுங்குவிதிகள் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக அதன்முன்னர் இடப்படுதல் வேண்டுமென்பதுடன், அது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் மட்டுமே பயனுறுதல் வேண்டும்.

இவ்வுப பிரிவின் நோக்கத்துக்காக -

''மருத்துவ ஆலோசனை'' என்பது, மருத்துவக் கட்டளைச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட மருத்துவத்தொழிலர் ஒருவர், எந்த நடவடிக்கை முறை மூலம் ஒரு நோயாளரின் மருத்துவ வரலாற்றைப் பரிசீலிக்கின்றரோ, நோயாளரொருவரைப் பரிசோதனை செய்கின்றாரோ மற்றும் அத்தகைய நோயாளரின் கவனிப்பு மற்றும் சிகிச்சை பற்றி விதப்புரைகளைச் செய்கின்றாரோ அந்த நடவடிக்கை முறையையும் உள்ளடக்கும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (iv) ஆம் உட்பந்தியில், "(ஒரு கப்பலிலிருந்து இன்னொன்றுக்கு ஏற்றி அனுப்பப்படுதல் உட்பட) பண்டங்களை அல்லது பயணிகளைச் சர்வதேசரீதியில் ஏற்றிச்செல்லுதல்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(ஒரு கப்பலிலிருந்து இன்னொன்றுக்கு ஏற்றி அனுப்பப்படுதல் உட்பட) பண்டங்களை அல்லது பயணிகளைச் சர்வதேசரீதியில் ஏற்றிச் செல்லுதல் ஆனால் இலங்கையிலுள்ள ஏதேனும் விமானநிலையத்திலிருந்து இலங்கைக்கு வெளியேயுள்ள வேறேதேனும் விமானநிலையத்துக்குச் செல்கின்ற வான்பயணிகளின் வானூர்திப் பயணச்சீட்டுக் கட்டணம் நீங்கலாக" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 8ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவுக்கான முதலாம் காப்புவாசகத்தில் "அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆள் பொறுப்பாகவுள்ள வழங்குகைகளாகக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுதலும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டம் நடைமுறைக்குவரும் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆள் பொறுப்பாகவுள்ள வழங்குகைகளாகக் கொள்ளப்படுவதாகக் கருதப்படுதலும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

(2) அப்பிரிவுக்கான இரண்டாம் காப்புவாசகத்தில், "ஆயின் மேலும்-" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயின் மேலும், இச்சட்டம் வலுவுக்குவரும்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்,

(i) அப்பிரிவின் (iv) ஆம் பந்தியில் "2015, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2015, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2016, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அதன் (iv) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(v) 2016, ஏப்பிறல் 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும்-

(அ) விடயத்திற்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதியின் முடிவில், விடயத்திற்கேற்ப, ஒருமாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் சொல்லப்பட்ட அத்தகைய

ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரண்டுமாத காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் மொத்தப் பெறுமதி பன்னிரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப் படற்பாலதான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரண்டுமாத காலப்பகுதியில் பன்னிரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்பு

வதற்கு எந்நேரத்திலும் நியாய மான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுவ தற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண் டும்.''.

(iii) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் முதலாம் காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் காப்புவாசகத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

''ஆயின், மேலும், (v)ஆம் பந்தியின் நோக் கங்களுக்காக, பதிவுசெய்யப்படுவதற்கான தேவைப்பாடு 2016, மே 2ஆம் தேதியிலிருந்து எழுகின்றதாதல் வேண்டும்.''.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(i) அதன் (இ) என்னும் உட்பந்தியில், ''2015, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக ''2015, சனவரி 1ஆம் திகதியன்று அல்லது அதன்பின்னர், ஆனால் 2016, ஏப்பிறல் 1ஆம் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் அத்தகைய மூன்று மாதகாலப்பகுதிக்கு மற்றும் 2016, யூலை 11 ஆம் திகதியிலிருந்து தொடங்குகின்ற ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும் திகதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற காலப் பகுதிக்கு; அத்துடன்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) அப்பிரிவின் (இ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(ஈ) இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கு கின்ற ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற மூன்று மாதங்களைக் கொண்ட அத்தகைய ஏதேனும் காலப் பகுதிக்குப் பன்னிரண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப் பின்;"

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு,அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (ஆ) மற்றும் (இ) என்னும் விடயங்களை நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஆ) அவ்வழங்கல் எவ்வாளுக்குச் செய்யப்படுகின்றதோ அவ்வாளின் பெயர், முகவரி, மற்றும் பதிவிலக்கம்;

(இ) வரிப் பட்டியல் வழங்கப்பட்ட தேதியும் ஏதேனும் இடைவெளியின்றி 40 இலக்கங்களை விஞ்சாத அதன் தொடரிலக்கமும்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு, இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய படிவத்தில் தரப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட வாறான அத்தகைய விபரங்களைக் கொண்டி ருத்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆணையாளர் தலைமையதிபதி யினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின்மூலம் ஆணையாளர் தலைமை யதிபதி குறித்துரைக்க கூடியவாறான அத்த

கைய விபரங்களைக் கொண்ட குறித்துரைக் கப்பட்ட படிவத்திலும் இயைபான அட்ட வணைகளுடனும் இருத்தல் வேண்டும்." என் னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத்து வதன் மூலமும்:-

"(1அ) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப் பட்டவாறான, அத்தகைய படிவத்தில் இராததும் இயைபான அட்டவணைகளுடன் அத்தகைய எல்லா விபரங்களையும் கொண்டி ராததுமான வழங்குகைகளின் மீதான விபரத் திரட்டைக் கொடுத்துதவுகின்ற பதிவுசெய்யப் பட்ட ஆளொவ்வொருவரும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வழங்குகைகளின் மீதான விபரத்திரட்டைக் கொடுத்துதவாதவராகக் கருதப்படுதல் வேண்டும்.

(1ஆ) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள், ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கு (1)ஆம் உட்பிரிவிற் குறித்துரைக் கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் வழங்குகைகளின் மீதான விபரத்திரட் டொன்றைக் கொடுத்துதவுமிடத்தும் (1அ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் விபரத்திரட்டைக் கொடுத்துதவாதவராகக் கருதப்படுமிடத்தும், உதவி ஆணையாளர், அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவுற்ற பின்னரான மாதத்தின் கடைசி நாளிலிருந்து பதிநான்கு நாட்களுக்கு முன்னர் அத்தகைய பதிவு செய்யப்பட்ட ஆளுக்கு அறிவித்தலொன்றை வழங்குதல் வேண்டுமென்பதுடன், அவரினால் கொடுத்து

தவப்பட்ட விபரத்திரட்டு, (1)ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்திலும் அட்டவணைகளிலும் இல்லாத தால் அது ஒரு தகுந்த விபரத்திரட்டல்ல என அவருக்கு அறிவித்தலும் வேண்டும்.

(1இ) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் (1ஆ) என்னும் உட்பிரிவின் கீழான அறிவித்தலைப் பெறுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய அறிவித்தல் பெறப்பட்டதிலிருந்து பதினான்கு நாட்களினுள், (1ஆ) என்னும் உட்பிரிவில் தேவைப்படுத்தப்பட்டவாறாக தகுந்த விபரத்திரட்டொன்றைக் கொடுத்து தவுதல் வேண்டும். அதன் பின்னர் (1ஆ) என்னும் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய விபரத்திரட்டுத் தொடர்பில் அதன்பின்னர் ஏற்புடையனவாதலுமாகாது.

(1ஈ) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காகச் செல்லுபடியான விபரத்திரட்டெனக் கருதப் படவேண்டிய முறையான விபரத்திரட்டைப் பெற்றுக்கொண்டதன்மேல் மட்டுமே விபரத் திரட்டின் பெறுகையை உதவி ஆணையாளர் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.”;

(2) அப்பிரிவின் (2)ஆம் உட்பிரிவில் “குறித்துரைக்கப்பட்ட காலத்தினுள் விதித்துரைக்கப்பட்ட படிவத்தில்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “குறித்துரைக் கப்பட்ட காலத்தினுள் குறித்துரைக்கப்பட்ட படிவத் திலுள்ள அட்டவணைகளிலும்” என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 22ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில், “இலங்கையினுள் அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும் இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;” என்னும் சொற்களுக்குப் பதிலாக பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“இச்சட்டம் வலுவுக்குவரும் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதி தொடர்பில் இலங்கையினுள் அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும் இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டுமென்பதுடன், இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து ரூபாவாதலும் வேண்டும்.”;

(2) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்பு வாசகத்தின் (ஆ) என்னும் பந்தியில், ‘‘பின்வரும் வீதங்களில் இருத்தல் வேண்டும்:-” என்னும் சொற்களிலிருந்து தொடங்கி ‘‘கிராமுக்கு நாற்பது ரூபா.”. என்பது வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

“இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்குப் பின்வரும் வீதங்களில் இருத்தல் வேண்டும்:-

(i) நார்ப்பட்டுக்கு அல்லது திரைச் சீலைகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு நாற்பது ரூபா;

(ii) துவட்டிகளுக்கு ஓர் உருப்படிக்கு இருபத்தைந்து ரூபா;

(iii) நெய்யப்பட்ட துணிவகைகளினால் தயாரிக்கப்பட்ட பைகளுக்கு ஓர் உருப்படிக்கு நாற்பது ரூபா;

(iv) ஒவ்வொரு துண்டும் நீளத்தில் இரண்டு மீற்றர்களுக்கு மேற்படாத, வெட்டுத்துண்டுகளாக விஞ்சுதலான நெய்யப்பட்ட துணிவகைகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு இருபத்தைந்து ரூபா;

(v) வேறெவையேனும் நெய்யப்பட்ட துணிவகைகளுக்கு ஒரு கிலோகிராமுக்கு நாற்பது ரூபா; அத்துடன்

இச்சட்டம் வலுவுக்கு வரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு (i) முதல் (v) வரையிலான பந்திகளிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு கூறுக்கும் எழுபத்தைந்து ரூபாவான வீதத்திலிருத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்புவாசகத்தின் (உ) என்னும் பந்தியில், "பண்டங்களின் ஏற்றுமதியாளர்களுக்குப் பண்டங்களை வழங்குபவராகவுள்ளவருமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளுக்குப் பண்டங்களை வழங்குபவராகவுள்ளவருமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(4) அப்பிரிவின் (10)ஆம் உட்பிரிவுக்கான இரண்டாவது காப்பு வாசகத்தின் (ii)ஆம் விடயத்தில், "வழங்குநரொருவரினால் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வழங்குநரொருவரினால் 2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட எவரேனுமாளுக்கு வழங்கப்பட்ட" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(5) அப்பிரிவின் (13) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :-

“(14) மூன்றாம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வரும் மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை வியாபாரத்தில் பண்டங்களை வழங்குப வருமான எவரேனுமாள் 2016, மே 2ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு இச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுமிடத்தும், அத்தகைய பண்டங்களின் வழங்குகை, இச்சட்டத்தின்கீழ் வரிக்காகப் பதிவு செய்யப்படாத ஆளொருவரிடமிருந்து அப்பண்டங் களின் அவரது கொள்வனவுகளின் மீது வரிப்பட்டியல் தவிர்ந்த ஒரு விலைப்பட்டியினால் ஆதாரப்படுத்தப்படுமிடத்தும், அத்தகைய பண்டங்கள் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படாதவிடத்தும், விற்கப்பட்டுள்ள பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களென உதவி ஆணையாளரொருவர் திருப்திப்படின், இச்சட்டத் தின் 2ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வரிப்பின்ன வீதத்தில் அத்தகைய கொள்வனவு களின் கணக்கால் அத்தகைய ஆளுக்குக் கருதப் பட்ட உள்ளீட்டு வரியொன்று அனுமதிக்கப் படலாம்:

ஆயின், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் ஆணையாளர் தலைமையதிபதி குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய கொள் வனவுகளுக்காகப் பதிவேடொன்று பேணப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேடு அத்தகைய ஆளின் இயைபான விபரத்திரட்டுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.”.

**11**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியில், “2015, சனவரி 1 ஆந்தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2015, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னரான, ஆனால் 2016, மே 2ஆம் தேதிக்கு முன்னரான” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் 2ஆம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்து வதன் மூலமும்:-

“(ஈ) விடயத்துக்கேற்ப, மூன்றுமாதங்களைக் கொண்ட காலப்பகுதிக்கு அத்தகைய வழங் கல்களின் பெறுமதி மூன்று மில்லியன் ரூபாவை விஞ்சுமிடத்து அல்லது பன்னிரண்டு மாதங்களைக்கொண்ட காலப்பகுதிக்குப் பன்னிரண்டு மில்லியன் ரூபாவை விஞ்சு மிடத்து, அத்தகைய பதிவு 2016, மே 2ஆம் தேதியன்று அல்லது அதற்குப்பின்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக இடம்பெற்றி ருப்பின்.”.

**12**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்:-

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில், “2011, சனவரி 1ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்காக ஒரு மாதமாகவிருத்தல் வேண்டும்; அத்துடன்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, “2011, சனவரி 1ஆம்

தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்காக ஒரு மாதமாகவிருத்தல் வேண்டும்;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "2011, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2011, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும் ஆனால் 2016, ஏப்பிறல் 1ஆம் தேதிக்குமுன்னர் முடிவடைகின்றதுமான" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(இ) இச்சட்டம் வலுவுக்குவரும்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காகப் பன்னிரண்டு மாதங்களாகவிருத்தல் வேண்டும்;".

(ஈ) அவ்வுட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"ஆயின்,-

(i) 2016, சனவரி 1 ஆந்தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கு எந்த ஒரு குறித்துரைக்

கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் கணக்குகள் மார்ச்சு 31ஆம் நாளன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்களைக்கொண்ட காலப் பகுதிக்குத் தயாரிக்கப்படுகின்றனவோ அந்த ஒரு குறித்துரைக் கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் விடயத்தில், அந்தப் பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப் பகுதிக்காக ஆறுமாதங்களைக் கொண்ட காலப்பகுதி ஏப்பிறல் 1ஆம் நாளன்றும் ஒற்றோபர் 1ஆம் நாளன்றும் தொடங்கப்படலாம்; அத்துடன்

(ii) 2016, சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கு எந்த ஒரு குறித்துரைக் கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் கணக்குகள் மார்ச்சு 31ஆம் நாளன்று முடிவடைகின்ற பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப் பகுதிக்குத் தயாரிக்கப்படுகின்றனவோ அந்த ஒரு குறித்துரைக் கப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறெவரேனும் ஆளின் விடயத்தில், பன்னிரண்டு மாதங்களைக் கொண்ட காலப்பகுதி ஏப்பிறல் 1ஆம் நாளன்று தொடங்கப்படலாம்;

மாச்சு 31ஆம் நாளன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகக் கணக்குகள் தயாரிக்கப் படுமிடத்து, சனவரி 1ஆம் நாளன்று தொடங்கி மாச்சு 31ஆம் நாளன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்காகத் தனிவேறான விபரத்திரட்டொன்று ஆணையாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்துடன் அத்தகைய மாற்றமேற்படும் நேரத்தில் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.”.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவுகளை இடுவதன் மூலமும்:-

“(2) பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் ஒவ்வொன்றும் அல்லது வேறு ஆள் ஒவ்வொருவரும் வரிவிதிக்கப்படற்பாலதான ஒவ்வொரு காலப்பகுதி தொடர்பிலும் -

(அ) அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி இச்சட்டம் வலுவுக்குவரும் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதியாகவிருப்பின், வரிவிதிக்கப்படற் பாலதான காலப்பகுதியை அடுத்துவரும் மாதம் முடிவடையுமுன்னர்; அத்துடன்

(ஆ) அத்தகைய வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர் தொடங்குகின்ற வரிவிதிக்கப்படற்பால தான காலப்பகுதியாக விருப்பின், அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதி முடிவடைவதனை உடனடுத்துவரும் ஆறுமாதங்களினுள்,

குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2அ) (அ) ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய படிவத்திலிராத விபரத்திரட்டைக் கொடுத்துதவுகின்ற அல்லது பிரிவு 25இ இன் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆறுமாதங்களுக்கும் இடைக்கால மதிப்பீடொன்றைக் கொடுத்துதவத் தவறுகின்ற அல்லது அத்தகைய விபரத்திரட்டின் அல்லது இடைக்கால மதிப்பீட்டின் உள்ளடக்கங்களைக் கொடுத்து உதவத் தவறுகின்ற பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு குறித்துரைக்கப்பட்ட நிறுவனமும் அல்லது வேறு ஒவ்வோராளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நிதிசார் சேவைகள் மீதான சேர்பெறுமதிவரியின் விபரத்திரட்டொன்றைக் கொடுத்துதவவில்லையெனக் கருதப்படுதல் வேண்டும்.

(ஆ) பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் அல்லது எவரேனுமாள், விடயத்துக்கேற்ப, ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு அல்லது ஆறுமாதங்களைக் கொண்ட ஏதேனும் காலப்பகுதிக்கு இப்பிரிவிலும் 25இ என்னும் பிரிவின் (1)ஆம் உட்பிரிவிலும் குறித்துரைக்கப்பட்ட தேதியன்று அல்லது அதற்கு முன்னர் நிதிசார் சேவைகளின் மீது சேர்பெறுமதிவரி பற்றிய விபரத்திரட்டை அல்லது இடைக்கால மதிப்பீட்டைக் கொடுத்துதவுகின்றவிடத்தும் 25ஆ ஆம் பிரிவின் (2அ) என்னும் உட்பிரிவின் பந்தி

(அ)வின் ஏற்பாடுகளின்கீழ் நிதிசார் சேவைகளின்மீதான சேர்பெறுமதிவரி பற்றிய விபரத்திரட்டைக் கொடுத்துதவவில்லையெனக் கருதப்படுமிடத்தும், வரிமதிப்பீட்டாளர் அல்லது உதவி ஆணையாளர், அத்தகைய வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதி முடிவடைந்த பின்னரான மாதத்தின் கடைசி நாளிலிருந்து முப்பது நாட்கள் முடிவுறுமுன்னர், அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளினால் கொடுத்துதவப் பட்ட விபரத்திரட்டு அல்லது இடைக்கால மதிப்பீடு ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்படுகின்றவாறான அத்தகைய படிவத்திலும் அட்டவணையிலும் இல்லை என அத்தகைய ஆளுக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

(இ) பதிவுசெய்யப்பட்ட எவரேனுமாள் (ஆ) என்னும் பந்தியின்கீழ் தகவல்களைப் பெறுமிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய தகவல் கிடைக்கப்பெற்றதிலிருந்து முப்பது நாட்களினுள் ஆணையாளர் தலைமையதிபதிக்கு ஒரு தகுந்த விபரத்திரட்டைக் கொடுத்துதவுதல் வேண்டும். அதன்பின்னர் (அ) என்னும் பந்தியின் ஏற்பாடு கள் அத்தகைய விபரத்திரட்டுத் தொடர்பில் ஏற்புடையனவாதலாகாது.".

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "செலுத்தப்படுதல் வேண்டும்". என்னும் சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"செலுத்தப்படுதல் வேண்டும்:

ஆயின், இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக, மாதாந்த அடிப்படையில் ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்தினாலும் அல்லது வேறு ஆளினாலும் செலுத்தப்படற்பாலதான வரியானது, 25இ என்னும் பிரிவின் (ஆ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்திற் குறிப்பீடுசெய்யப்பட்ட இடைக்கால மதிப்பீட்டின் மீது ஒவ்வோர் ஆறுமாத காலப்பகுதிக்காகவும் மொத்தப் பொறுப்புடன் சீராக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், செய்யப்பட்ட மாதாந்தக் கொடுப்பனவுகள், விபரத்திரட்டைச் சமர்ப்பிப்பதுடனான இறுதிவரிக்கமைய இடைக்கால மதிப்பீட்டின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட வரியிலும் பார்க்கக் குறைவாகவிருப்பின், இடைக்கால மதிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதுடன் செலுத்தப்படற்பாலதாதலும் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**13.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் -

(அ) "வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பொருளாதாரத்தின் நலனைக் கருத்துட் கொண்டு," என்னும் சொற்களுக்குப் பதிலாக "வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம் பொருளாதாரத்தின் நலனைக் கருத்துட்கொண்டும் அனுமதிக்கப்படத்தக்க தேய்வின் ஒருசீர்மையைப் பேணியும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) (1) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய காப்புவாசகத்தை இடுவதன் மூலமும்:-

"ஆயின், எவ்வாறாயினும், -

(அ) இச்சட்டம் வலுவுக்குவரும் தேதிக்கு முன்னர் முடிவடைகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, எவ்வாறாயினும் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதுமான காலப்பகுதிக்கு இலாபங்களின் தொகையைச் செம்மையான முறையில் நிச்சயிக்க முடியாதவிடத்து, அத்தகைய தொகை, கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையில் மதிப்பிடப்படலாம். மதிப்பிடப்பட்ட தொகைகள், வருடாந்த அடிப்படையின் மீது கணக்காய்வுசெய்யப்பட்ட கணக்குகள் பற்றிய கூற்றுடன் உள்ளபடியான தொகைகளைப் பிரதிபலிப்பதற்குச் சீராக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சீராக்கம் இயைபான கணக்கீட்டுக் காலப்பகுதி முடிவடைந்த தேதிக்கு பின்னர் ஆறுமாதங்களினுள் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்; அத்துடன்

(ஆ) இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு, மாதாந்த இலாபங்களின் தொகையை மாதாந்தக் கொடுப்பனவுகளுக்காகச் செம்மையான முறையில் நிச்சயிக்க முடியாதவிடத்து, அத்தகைய தொகை, கிடைக்கக்கூடிய தகவலின் அடிப்படையின் மீது மதிப்பிடப்படலாமென்பதுடன், ஒவ்வொரு பதிவுசெய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட

நிறுவனமும் அல்லது வேறெவரேனு மாளும், வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியின் ஒவ்வொரு ஆறு மாதங்களைக் கொண்ட காலப்பகுதி தொடர்பிலும் அத்தகைய ஒவ்வொரு ஆறு மாத காலத்தையும் அடுத்துவரும் மாதம் முடிவடையுமுன்னர் குறித்து ரைக்கப்பட்ட படிவத்தில் இலாபங்களின் இடைக்கால மதிப்பீடொன்றைக் கொடுத் துதவுதலும் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் - அவ்வுட்பிரிவின் (ஈ) மற்றும் (உ) என்னும் பந்திகளை நீக்கிவிட்டு அவற்றுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(ஈ) 2011, சனவரி 1 ஆந்தேதியிலிருந்து ஆனால் 2015, சனவரி 1 ஆந்தேதிக்குமுன்னர் தொடங்கும் காலப்பகுதிக்குப் பன்னிரண்டு சதவீதமாதல் வேண்டும்;";

(உ) 2015, சனவரி 1ஆம் தேதியிலிருந்து, ஆனால் 2016, மே 2ஆம் தேதிக்குமுன்னர் தொடங்கும் காலப் பகுதிக்குப் பதினொரு சதவீதமாதல் வேண்டும்;"; அத்துடன்

(ஊ) 2016, மே 2ஆம் தேதியிலிருந்து தொடங்கும் காலப்பகுதிக்குப் பதினைந்து சதவீதமாதல் வேண்டும்.".

(3) அப்பிரிவின் (5)ஆம் உட்பிரிவில் -

(அ) அதன் (எஎ) என்னும் பந்தியில் "இலாபங்கள் அல்லது வருமானம்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "தொழிலொன்றிலிருந்தான இலாபமாக விராத இலாபங்கள் அல்லது வருமானம்." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

(ஆ) அவ்வுட்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூலமும்:-

“இவ்வுட்பிரிவின் நோக்கங்களுக்காக,“இலங்கை மத்திய வங்கியுடன்பதிவுசெய்யப்படாதவரும், ஆனால் நிதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்படும் அதையொத்த சேவைகளை வழங்குகின்றவருமான ஆளொருவர்” என்னும் சொல்லமைப்பு, எந்தக் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆளின் அல்லது ஆட்கள் குழுவின் தொழில் அல்லது தொழிலின் பாகம், வைப்பு என்றவகையாக அல்லது கடன்தொகுதிப் பத்திரத்தை அல்லது முறியை, பணத்தை ஏற்றுக்கொள்வதனையும் அதன்மீது வட்டி, இலாபம் அல்லது கழிப்பனவு என்பவற்றைக் கொடுப்பனவு செய்வதனையும் அல்லது வட்டியைப் பெறவதற்காகக் கடன் வழங்குவதனையும் கொண்டுள்ளதோ, அத்தகைய ஏற்றுக்கொள்கை அவரது சொந்தச் சார்பில் இருப்பினுஞ்சரி அல்லது வேறேவரேனுமாளின் சார்பில் இருப்பினுஞ்சரி, அந்த எவரேனும் ஆளை அல்லது ஆட்கள் குழுவை உள்ளடக்குகின்றது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 25ஊ என்னும் பிரிவு, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

“(இ) ஏதேனும்;-

- நிதிக்குத்தகை உடன்படிக்கையின்கீழ்; அல்லது-

- இச்சட்டம் வலுவுக்குவரும்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கான தவணைப்பணம் தொடர்பில் தொழிற்பாட்டுக் குத்தகை உடன் படிக்கையின்கீழ்,

ஏதேனும் சொத்தின் மீது, அத்தகைய உடன்படிக்கை 2014, ஒற்றோபர் 25 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் செய்துகொள்ளப்படின், மற்றும் 2014, ஒற்றோபர் 25 ஆந் தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டவோர் உடன் படிக்கையாக இராதிருப்பின், குத்தகை வசதிகளை வழங்குதல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**15**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 66 ஆம் பிரிவு, அப்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

"(ஈ) தொடரிணைமூலம் பதிவுசெய்வதற்காகப் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்தல், பதிவுசெய்வதற்காகப் பிழையான தகவலை மேலேற்றுதல் அல்லது அரசிறை நிருவாகம், முகாமைத் தகவல் முறைமையின் கீழ் அனுமதிக்கப்பட்ட இலத்திரனியல் கோப்பிடுகை முறைமையின் கீழ் பொய்யான ஆவணங்களைச் சமர்ப்பித்து,".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**16**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில் "அத்தகைய வழங்கல் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல் ஒன்றாக பின்னர் வருகின்றது என்பதுடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய வழங்கல் 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கு வரி விதிக்கப்படற்பாலதான வழங்கல் ஒன்றாகப் பின்னர் வருகின்றது என்பதுடன்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படு கின்றது.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

“(3) மொத்தவிற்பனை அல்லது சில்லறை வியாபாரத்தில் பண்டங்களை வழங்குகின்ற எவரேனுமாள், 2016, மே 2 ஆந்தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்றதும் 2016 திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதிக்கு இச்சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப் படுமிடத்து, மற்றும் இச்சட்டத்துக்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்படாதவையும், பதிவுத்தேதியன்றுள்ளவாறு அத்தகைய ஆளின் விற்கப்படாதுள்ளவையுமான கையிருப்புகள் எஞ்சி யிருப்பின், அத்தகைய கையிருப்புகளின் கணக்கால் பதிவானது பயனுறுவதாக வருமிடத்து 2ஆம் பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட வீதத்திலான கருதப்பட்ட உள்ளீட்டு வரியானது வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு அத்தகைய ஆளுக்கு அனுமதிக்கப் படலாம்:

ஆயின், அத்தகைய கையிருப்புகளுக்காக 22 ஆம் பிரிவின் (14) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில் குறித்துரைக்கப்படுகின்றவாறான ஒத்த பதிவே டொன்று பேணப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பதிவேடு அத்தகைய ஆளின் இயைபான விபரத்திரட்டுடன்சேர்த்து சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்திற் கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.*

**17**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படு கின்றது:-

(1) அப்பாகத்தின் பந்தி (அ) வில் -

(அ) (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(i) கோதுமை, கோதுமை மா அல்லது சேர்க் கப்பட்ட சீனியை அல்லது வேறு இனிப் பூட்டும் பொருளைக் கொண்டிராத பால்மா;”

(ஆ) (xix) ஆம் விடயத்தின் (உ) என்னும் உப விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(உ) 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2016, மே 2ஆம் தேதிக்கு முன்னர் தொலைத்தொடர்புச் சாதனங்கள்;";

(இ) (xx)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xx) 2011, சனவரி 1 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2016, மே 2 ஆம் தேதிக்கு முன்னர் ஏதேனும் எந்திரத்தொகுதி அல்லது உயர் தொழினுட்பச்சாதனங்கள், தொலைத் தொடர்புச் தொழிலில் புறநீங்கலாகப் பயன்படுத்தப்படுவதற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன அல்லது கொள் வனவு செய்யப்படுகின்றன மற்றும் தொலைத்தொடர்புச் சேவைகளின் எவரேனும் தொழிற்படுத்துநரினால் இறக்குமதி செய்யப்படுகின்றன அல்லது கொள்வனவு செய்யப்படுகின்றன என இனங்காணப்பட்டுள்ள அத்தகைய எந்திரத்தொகுதி அல்லது சாதனங்கள்;";

(ஈ) (xxv) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(xxv) தொலைத்தொடர்புக் கைத்தொழி லுக்கான செப்புக் கேபிள்கள்,-

- இலங்கையில் இல்லாதவிடத்து 2016, மே 2ஆம் தேதிக்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய செப்புக் கேபிள்கள்; அல்லது -

- தொலைத்தொடர்புத் தொழிலுக்கென 2016, மே 2 ஆம் தேதிக்கு முன்னர் உள்நாட்டு உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அத்தகைய செப்புக் கேபிள்கள்.".

(2) அப்பாகத்தின் (ஆ) என்னும் பந்தியில்-

(அ) (x)ஆம் விடயத்தின் (ஏ) என்னும் உட்பந்தியின் (இ) என்னும் உபவிடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(இ) ஏதேனும் -

- நிதிக்குத்தகை உடன்படிக்கையின்கீழ்; அல்லது -

- இச்சட்டம் வலுவுக்குவரும்தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்கான தவணைப்பணம் தொடர்பில் தொழிற்பாட்டுக் குத்தகை உடன்படிக்கையின்கீழ்,

ஏதேனும் சொத்தின்மீது, அத்தகைய உடன்படிக்கை 2014, ஒற்றோபர் 25 ஆந்தேதியன்று அல்லது அதன்பின்னர் செய்துகொள்ளப்படின், மற்றும் 2014, ஒற்றோபர் 25 ஆந்தேதிக்கு முன்னர் செய்துகொள்ளப்பட்டவோர் உடன்படிக்கையாக இராதிருப்பின், குத்தகை வசதிகளை வழங்குதல்;"

(ஆ) (xi)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(xi) வதிவிட இடவசதியின் வழங்குகை, குத்தகை அல்லது வாடகையாகவுள்ள சேவைகள்:-

(அ) 2001, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் கீழ் இலங்கை முதலீட்டுச் சபையுடன் உடன் படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ளதும், அத்தகைய உடன்படிக்கை எக்கருத்திட்டங் களுடன் தொடர்புபட்டதோ அக் கருத்திட்டங்களின் மொத்த ஆகுசெலவு பத்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலருக்கு அல்லது வேறேதேனும் நாணயத் தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாக இராததும், அக் கருத்திட்டம் மேற்கூறப்பட்ட வழங்கு கையுடன், குத்தகையுடன் அல்லது வாடகையுடன் புறநீங்கலாகத் தொடர்புபட்டதாக உள்ளதுமான தொழில் முயற்சியொன்றாக வுள்ளதான, ஆளொருவரினாலான வதிவிடவசதியின் வழங்குகை, குத்தகை அல்லது வாடகை தவிர அத்தகைய வழங்குகை இச்சட்டம் வலுவுக்குவரும்தேதிக்குமுன்னர் இடம்பெற்றிருப்பின்;

(ஆ) அத்தகைய வழங்குகை-

(i) அத்தகைய வழங்குகையுடன் தொடர்புபட்ட கருத்திட்டத் தின் மொத்த ஆகுசெலவு ஐந்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலரை அல்லது வேறேதேனும்

நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சாதவிடத்து தொழில் முயற்சியொன்றினால்; அல்லது

(ii) அத்தகைய வழங்குகையுடன் தொடர்புபட்ட கருத்திட்டத்தின் மொத்த ஆகுசெலவு:-

- ஐந்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலருக்கு அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாக விராதவிடத்தும், கருத்திட்டமானது பகுதியளவில் மேற்கூறப்பட்ட வழங்குகை, குத்தகை அல்லது வாடகையுடன் தொடர்புபட்டதாக விருக்குமிடத்தும்; அல்லது

- பத்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலரை அல்லது வேறேதேனும் நாணயத்தில் அதற்கு சமமானதை விஞ்சாதவிடத்தும், கருத்திட்ட மானது மேற்கூறப்பட்ட வழங்குகை, குத்தகை அல்லது வாடகையுடன் புறநீங்கலாகத் தொடர்புபட்டுள்ளவிடத்தும், அத்தகைய வழங்குகையுடன் தொடர்புபட்ட உடன்

படிக்கை, இச்சட்டம் வலுவுக்குவரும் தேதிக்கு முன்னர் முறையான வாங்குநருடன் செய்துகொள்ளப் படுமிடத்தும்,

தொழில்முயற்சியொன்றினால்;

(iii) 2015, ஒற்றோபர் 30 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டதும் 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின்கீழ் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டமொன்றாக அங்கீகரிக்கப் பட்டதுமான ஏதேனும் கருத்திட்டத்தினால்; அத்துடன்

(iv) முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஊ) என்னும் பந்தியின் (ii)ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்தின் வீடமைப்புக் கூறுகளினதாக,

இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று அல்லது அதன்பின்னர் இடம்பெற்றிருப்பின்.";

(இ) (xii)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(xii) 2016, மே 2ஆம் தேதிக்கு முன்னர் மற்றும் 2016, யூலை 11ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும் திகதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்றது மான காலப்பகுதிக்கு மருத்துவ நிறுவனங்களினால் அல்லது அத்தகைய கவனிப்பை வழங்குகின்ற உயர்தொழில்ரீதியில் தகைமைபெற்ற ஆட்களினால் வழங்கப்பட்ட எல்லாச் சுகாதாரக் கவனிப்புச் சேவைகளும்;";

(ஈ) (xxvi) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(xxvi) உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட உடன்பால் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் அளவு வரை அத்தகைய பாலிலிருந்து, சேர்க்கப்பட்ட சீனி அல்லது வேறு இனிப்பூட்டும் பொருளைக் கொண்டுள்ள பால்மா தவிர்ந்த உள்

நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பாற்பண்ணை உற்பத்திப் பொருட்களும் மற்றும் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட அரிசியைக் கொண்டுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி உற்பத்திப் பொருட்களும்;"

(உ) (xxxi)ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(xxxi) 2016, மே 2ஆம் தேதிக்கு முன்னரும் மற்றும் 2016, யூலை 11 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும் திகதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்புகள் அறவீட்டுச் சட்டத்தின் கீழான தொலைத்தொடர்பு அறவீட்டுக்கமைவாகத் தொலைத்தொடர்புச் சேவைகளும், அச்சட்டத்தில் "தொலைத்தொடர்புச் சேவைகள்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில் அத்தகைய பொறுப்பிலிருந்து குறிப்

பாகத் தவிர்க்கப்பட்ட சேவைகளும்;";

(ஊ) (XXXV) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(XXXV) *1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக் குழுவினால் 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் மற்றும் 2016, யூலை 11 ஆந்தேதியிலிருந்து தொடங்குகின்றதும் ஆனால் இச்சட்டம் வலுவுக்கு வரும் திகதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்றதுமான காலப்பகுதிக்கு உள்நாட்டுத் தொலைத்தொடர்புத் தொழிற்படுத்துநர்களுக்கு உரிமங்கள் வழங்கும் சேவைகள்;";*

(எ) அப்பந்தியின் (XL) என்னும் விடயத்தில், "ஏற்றுமதியாளர்களுக்கு அல்லது சைவர் வீதமிடப்பட்ட சேவைகளாக மதிப்பிடப்பட்ட சேவைகளை வழங்குவோருக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக

"2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியின் (i) முதல் (vii) வரையிலான விடயங்களில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனு மாளுக்கு அல்லது சைவர் வீத மிடப்பட்ட சேவைகளாக மதிப்பிடப் பட்ட சேவைகளை வழங்குவோ ருக்கு" என்னும் சொற்களை இடு வதன்மூலமும்;

(3) அப்பாகத்தின் (ஊ) என்னும் பந்தியில், அப்பந்தியின் (iii) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(iii) 1972 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் சங்கத்தினால் அல்லது அத்தகைய பதிவு செய்தலுக்காக ஏற்பாடுசெய்கின்ற ஏதேனும் மாகாணசபையினால் ஆக்கப்பட்ட முறையான ஏதேனும் நியதிச்சட்டத்தின்கீழ், அல்லது 2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட லக் சதோசவினால் 2016, மே 2 ஆந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பண்டங் கள் அல்லது சேவைகள்.".

(4) அப்பாகத்தின் (ஔ) என்னும் பந்தியில்-

"(ஆ) அப்பந்தியின் (ஆ) என்னும் உட்பந்தியில், "2014 ஒக்டோபர் 25ஆந் திகதியின் பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2014 ஒற்றோபர் 25 ஆந்திகதியின் பின்னர் ஆனால் இச்சட்டம் வலுவுக்குவரும் திகதிக்கு முன்னர்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

செல்லுபடியாக்குதல்.

**18.** இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சேர்பெறுமதி வரியை 2016, சனவரி 1ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் வலுவுக்குவரும் தேதியன்று முடிவடைகின்றதுமான காலப்பகுதியின்போது சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப் படுகின்றவரான எவரேனுமாள் உரிய அதிகாரத்துடன் செயலாற்றியுள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியானமுறையில் செய்யப் பட்டுள்ளதாகவும் செய்யப்படுவதாகவும் கருதப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஆள் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு களுக்கெதிராகவும் இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப்படு கின்றார்:

ஆயின், மேற்கூறப்பட்ட ஏற்பாடுகள், சொல்லப்பட்ட காலப் பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறாகச் சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத் தில் செய்யப்பட்ட ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதுள்ள எவை யேனும் வழக்குநடடிக்கைகளைப் பாதித்தலாகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**19.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*